# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

GP2124 අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 755/1 — 1993 පෙබරවාරි 22 වැනි සඳුදා— 1993.02.22

755/1 ஆம் இலக்கம் — 1993 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பி 3/87 III

1987 ஆம் ஆண்டின் இலங்கைப் பிணையங்கள்

பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

கொழும்பு,
1993.02.17.

டி. பி. விஜேதுங்க,
நிதி அமைச்சர்.

ஒழுங்குவிதி

1990 மே 29 ஆம் தேதிய 612/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், அதன் 3 ஆம் ஒழுங்கு விதியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகிறது.

(1) அவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியில் "10,000 ரூபா கட்டணம் ஒன்று", என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "50,000 ரூபா கட்டணம் ஒன்று", என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்;

(2) அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில் "3,500 ரூபா கட்டணம் ஒன்று", என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "10,000 ரூபா கட்டணம் ஒன்று", என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

03-106


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.




கவனிக்க.— 754/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேஷ வர்த்தமானத் தொடரின் இறுதி இல. 754/17.